# அன்னை மொழியே

*I.* **வினாவுக்கு விடையளி:-**

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை"
இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.

**விடை** நற்றிணை = நல் + திணை
தொகை நூல்களுள் முதல் நூல். நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்.

2. குறுந்தொகை:
நல்ல குறுந்தொகை எனவும் அழைக்கப்படும். குறைந்த அடியளவால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆதலால் குறுந்தொகை என அழைக்கப்பட்டது.

3. ஐங்குறுநூறு:
ஐந்திணைகளைப் பாடும் நூல். குறுகிய பாடலடிகள் கொண்ட நூல்.

4. பதிற்றுப்பத்து:
சேர அரசர்கள் பத்துப் பேரை 10 புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடியது பதிற்றுப்பத்து.

5. பரிபாடல்:

இது அகம், புறம் சார்ந்த நூல். தமிழின் முதல் இசைப்பாடல் நூல். வெண்பா , ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களாலும், பலவகையான அடிகளாலும் பாடப்பட்டுள்ளது.

6. கலித்தொகை:

ஐந்திணையும் ஐவரால் கலிப்பாவில் அமைந்த நூல். கலிப்பாவின் ஓசை துள்ளல் ஓசை. 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' எனவும் கூறப்படுகிறது.

7. அகநானூறு :

அகம் சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது. களிற்றியானை நிரை, மணிமிடைப் பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

8. புறநானூறு:

புறம் சார்ந்த நூல். 400 பாடல்களை உடையது. தமிழரின் வரலாற்றுப்பெட்டகம். இது பழந்தமிழரின் வீரம், பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், கொடை ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது.

2. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

**விடை**

- சீவக சிந்தாமணி,
- வளையாபதி,
- குண்டலகேசி
  இவையாவும் எஞ்சிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

3. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**விடை**

- அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகானமணிமேகலையே!

- கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

4. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் யாவை?

**விடை**

- உலகியல் நூறு
- கனிச்சாறு
- பாவியக்கொத்து
- மகபுகுவஞ்சி
- நூறாசிரியம்
- பள்ளிப் பறவைகள்
- எண்சுவை எண்பது

5. வண்டு – தேன் தமிழர் – தமிழ்ச்சுவை இவற்றை ஒப்பிட்டுப் பெருஞ்சித்திரனார் குறிப்பிடும் செய்தி யாது?

**விடை** வண்டு – தேன் :
உள்ளத்தில் கனல் மூள வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுகின்றது.

தமிழர் – தமிழ்ச்சுவை: தமிழர் செந்தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை எங்கும் முழங்குகின்றனர்.

6. "அன்னை மொழியே" என்ற பாடலில் அமைந்துள்ள விளிச்சொற்களை எழுதுக.

**விடை**

- செந்தமிழே!
- மாண்புகழே!
- நறுங்கனியே!
- எண்தொகையே!
- பேரரசே!
- நற்கணக்கே !
- தென்னன் மகளே!
- சிலம்பே !

7. "இன்னறும் பாப்பத்தே! எண் தொகையே! நற்கணக்கே!"

– இவ்வடியில் சுட்டப்படும் மொத்த நூல்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| பாப்பத்து | பத்துப்பாட்டு | 10 |
| எண்தொகை | எட்டுத்தொகை | 8 |
| நற்கணக்கே | பதினெண்கீழ்க்கணக்கு | 18 |
| மொத்த நூல்களின் எண்ணிக்கை | | 36 |

8. பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பு வரைக.

பெயர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இயற்பெயர் : துரை. மாணிக்கம்

ஊர் : சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்

பெற்றோர் : துரைசாமி, குஞ்சம்மாள்

இயற்றிய நூல்கள் : கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம், எண்சுவை எண்பது, மகபுகு வஞ்சி.

சிறப்பு : இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது.

காலம் : 10.03.1933 முதல் 11.06.1995 வரை

# இரட்டுற மொழிதல்

1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி என்பர். இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர். எ.கா: சீனிவாசன் பாற்கடலில் துயில் கொள்கிறான்.

– இத்தொடர் எவ்வித மாற்றமுமின்றி இரண்டு விதமான பொருளைத் தருகிறது.

- சீனியில் (சர்க்கரை) வாசம் செய்யும் எறும்பு பாலில் இறந்து மிதக்கிறது.
- சீனிவாசகனாகிய திருமால் பாற்கடலில் துயில் கொள்கிறார்.

2. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

3. கடலிலிருந்து கிடைக்கும் பொருட்கள் யாவை?

- முத்தும், அமிழ்தமும் கிடைக்கிறது.
- வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள் கிடைக்கிறன.

4. தமிழ்மொழி குறித்து தமிழழகனார் கூறிய செய்தி யாது?

- தமிழ் இயல், இசை, நாடகம் முத்தமிழாய் வளர்ந்தது.
- முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.
- ஐம்பெருங் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.
- சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

5. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன? அதன் வேறுபெயர் யாது?

- ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுறமொழிதல் அணி எனப்படும்.
- வேறுபெயர் – சிலேடை அணி.

6. சிலேடைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

சிலேடைகள் இரண்டு வகைப்படும். அவை:

- செம்மொழிச் சிலேடை
- பிரிமொழிச் சிலேடை

7. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| தமிழ் | கடல் |
|---|---|
| இயல் , இசை , நாடகம் என முத்தமிழால் வளர்ந்தது. | அமிழ்ந்து எடுக்க, முத்தினைத் தருகிறது. |
| முதற்சங்கம் , இடைச்சங்கம் , கடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு , சஞ்சலம் , பாஞ்சசன்யம் எனும் மூன்று வகைச் சங்குகளைத் தருகிறது. |
| சிலப்பதிகாரம் , மணிமேகலை , சீவகசிந்தாமணி , வளையாபதி , குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்களால் அணி செய்யப் பெற்றது. | கடல் மிகுதியான வணிகக் கப்பல்களை அணியாகச் சூழப்பெற்றது. |
| சங்கப்பலகையில் அமர்ந்த சங்கப்புலவர்களால் பாதுகாக்கப்பட்டது. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்குகளைக் காக்கிறது. |

8. **தமிழ் எவற்றோடெல்லாம் இணைத்துப் பேசப்படுகிறது ?**

தமிழ் விண்ணோடும் , முகிலோடும் , உடுக்களோடும் , கதிரவனோடும் , கடலோடும் இணைத்துப் பேசப்படுகிறது.

# காற்றே வா!

1. பாரதியாரின் படைப்புகள் சிலவற்றைக் கூறு.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி.

2. பாரதியார் எவ்வாறெல்லாம் பாராட்டப்பட்டார்?

- நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா
- சிந்துக்குத் தந்தை
- பாட்டுக்கொரு புலவன்
- மகாகவி
- கலைமகள்

3. பாரதியாரின் பன்முகங்கள் யாவை?

- கவிஞர்
- கட்டுரையாளர்
- சிறுகதை, ஆசிரியர்
- இதழாசிரியர்
- கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்களை உருவாக்குபவர்.

4. காற்றிடம் எதனைக் கொண்டுவந்து கொடுக்குமாறு பாரதியார் வேண்டுகிறார்?

மகரந்தத்தூளைச் சுமந்து, மனதை மயக்கும் வாசனையுடன், இலைகள் மற்றும் நீரலைகள்மீது உராய்ந்து மிகுந்த உயிர்வளியைக் கொண்டு வந்து கொடுக்குமாறு காற்றிடம் பாரதியார் வேண்டுகிறார்.

5. எப்படி வீசுமாறு காற்றைப் பாரதியார் பணிக்கிறார்?

காற்றை மெதுவாக, நல்ல முறையில் சீராக, நீண்டகாலம் நின்று வீசிக் கொண்டிருக்குமாறு பாரதியார் பணிக்கிறார்.

6. “உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்
உன்னை வழிபடுகின்றோம்” – என்று யார் யாரிடம் கூறுகின்றார்?

பாரதியார், காற்றிடம் கூறுகின்றார்.

7. **காற்றே வா வசனகவிதையில் இடம்பெற்றுள்ள வாசனையுடன் வா, அவித்து விடாதே போன்றவை கவிதையின் உட்பொருளினை விளக்க துணைநிற்பது குறித்து விளக்குக :-**

**வாசனையுடன் வா**

மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற இனிய வாசனையுடன் வா என்பதன் பொருளாவது. இயற்கையின் தூய மணமிக்க காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

**அவித்து விடாதே**

நெருப்பு எரிய சீரான காற்று அவசியம். அதிவேகக் காற்று நெருப்பைப் பரவச் செய்து மிகுந்த கேடுகளை உருவாக்கும். மிகவும் குறைவான வேகத்தில் வீசும் காற்றானது நெருப்பு பற்றி எரிய முடியாமல் நெருப்பு அணைவதற்கு காரணமாகிறது.

பாரதி தனது உயிரை நெருப்புக்கு ஒப்பிட்டுள்ளார். காற்றானது சக்தி குறைந்து போய் தன் உயிரை அவித்துவிடக் கூடாது எனவும் பேய் போல வீசி தமது உயிரை மடித்துவிடக் கூடாது எனவும் உட்பொருள் கொண்டு இவ்வேண்டுகோள் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்..

8. **வசன கவிதை - குறிப்பு வரைக**

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.
- ஆங்கிலத்தில் இதனை PROSE POETRY என்றழைப்பர். இவ்வடிவம் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று.

9. **காற்றே வா பாடலில் பாரதியார் கூறும் செய்தி யாது ?**

- மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா.
- இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து வந்து உயிர்வளியைக் கொடு.
- பேய் போல் வீசி எங்கள் உயிர் நெருப்பை அணைத்து விடாதே.
- சக்தி குறைந்து எம் உயிரை அவித்து விடாதே.
- நீடித்து நின்று சீராக வீசு.
- உம்மை வாழ்த்திப் பாடுகிறோம், உம்மைப் புகழ்கிறோம், உம்மை வணங்குகிறோம்.

என்றெல்லாம் பாரதியார் காற்றே வா பாடலில் பாடுகிறார்.

10. **மகாகவி பாரதியார் குறிப்பு வரைக**

| | | |
|---|---|---|
| பெயர் | - | மகாகவி சுப்பிரமணிய பாரதியார் |
| பெற்றோர் | - | சின்னசாமி - இலக்குமி அம்மையார் |
| பாராட்டுகள் | - | சிந்துக்குத் தந்தை, பாட்டுக்கொரு புலவன் பாரதி |
| பணி | - | ஆசிரியர், இதழாசிரியர், சிறுகதை ஆசிரியர் |

| | | |
|---|---|---|
| படைப்புகள் | - | கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி |
| பணியாற்றிய இதழ்கள் | - | இந்தியா , சுதேசமித்திரன். |

# முல்லைப்பாட்டு

1. **மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக :-**

- மாஅல் - பேருருவம் கொண்ட திருமால்
- இலக்கணக்குறிப்பு - செய்யுளிசை அளபெடை.

2. **விரிச்சி கேட்டல் என்றால் என்ன ?**

- ✓ ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ? முடியாதோ? என ஐயம் கொண்ட பெண்கள், மக்கள் நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தை தொழுது நிற்பர்.
- ✓ அயலார் பேசும் சொற்களைக் கூர்ந்து கேட்பர்.
- ✓ அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும்.
- ✓ தீய சொல் கூறின் தமது செயல் தீயதாய் முடியும் என்று எண்ணுவர்.

3. **முல்லைப்பாட்டு நூல் குறிப்பு வரைக ?**

- ❖ முல்லைப்பாட்டின் ஆசிரியர் நப்பூதனார்.
- ❖ பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- ❖ அடிகளின் எண்ணிக்கை 103.
- ❖ ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.
- ❖ முல்லை நிலத்தைப் பற்றிப் பாடப்பட்டது.
- ❖ பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்.

4. **முல்லைப்பாட்டு பாடலில் இடம் பெற்றுள்ள முதல் , கரு , உரிப் பொருள்களை எழுதுக ?**

விடை

| திணை | நிலம் | சிறுபொழுது | பெரும்பொழுது |
|---|---|---|---|
| முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | மாலை | கார் காலம் |

| கருப்பொருள் | | | உரிப்பொருள் |
|---|---|---|---|
| நீர் | மரம் | பூ | இருத்தல் இருத்தல் நிமித்தமும் |
| குறுஞ்சுனை நீர், காட்டாறு. | கொன்றை, காயா, குருந்தம். | முல்லை, பிடவம் தோன்றி. | |

5. **மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக :-**

**குறிப்பு - இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

விடை

- தேனடையிலிருந்து விழும் தேன்துளியைப் போல சில மணித்துளிகளுக்கு ஒரு முறை நீர் 'சொட் சொட்' என விழுந்தது.
- விரும்பத்தக்க தென்றலைப் போலவும் , மயிலிறகின் வருடலைப் போலவும் மெல்லிய குளிர் உடலில் ஓடும்.
- நீர் உள்ள தடாகத்திலே பலவகையான மீன்களும், தவளைகளும் தாவிக்குதிக்கும் போது ஏற்படும் ஓசையை ஒத்த 'சளப் தளப்' என்ற சத்தத்துடன் தேங்கிக் கிடந்த நீர்க் குட்டையில் குழந்தைகள் குதித்து விளையாடி மகிழ்ந்தனர்.
- அமைதியான நீரோட்டம் கொண்ட நதியானது இழுத்து வரும் சிறுசிறு கட்டை மற்றும் இதர பொருட்கள் போல குழந்தைகள் ஓடும் நீரில் காகிதக் கப்பல்களை விட்டு மகிழ்ந்தனர்.

**6. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக :-**

விடை **மழை மேகம் :**

மாவலி மன்னன் நீர் வார்த்து தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாக பேருருவம் எடுத்த திருமாலின் உருவத்தைப் போன்று அமைந்தது பெரிய மழை மேகம்.

**மழைப் பொழிவு :**

பெருந்தோற்றம் கொண்ட மழை மேகம் வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையாய்ப் பொழிந்தது.

**தெய்வ வழிபாடு :**

- ✓ முதுபெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.
- ✓ யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட மலர்களைச் சுற்றி ஆரவாரிக்கும்.
- ✓ மலர்ந்த முல்லைப்பூவோடு நாழியளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவுவர்.
- ✓ தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

**கன்றின் வருத்தம் :**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஒரு இடைமகள் கண்டாள். புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தி போன்ற கம்பையுடைய என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவர் ‘வருந்தாதே’ என்று கூறினாள்.

**முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :**

“இன்னே வருகுவர், தாயர் என்போள்

நன்னர் நன்மொழி கேட்டனம்”

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். உன் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே.

7. **குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை நிகழ்வை எழுதுக :-**

**அமைதி - வனம் - மனத்தைத் தொட்டது - கொஞ்சம் அச்சம் - ஆனால் பிடித்திருந்தது - இரவில் வீட்டின் அமைதியை விட - வனத்தின் அமைதி - புதுமை - கால்கள் தரையில் - இலைகளின் சலசலப்பு - பறவைகள் மரங்களின் மேல் - சிறகடிப்பு - அருகில் திரும்பியவுடன் - திடீரென ஆரவார ஓசை - தண்ணீரின் ஓட்டம் - அழகான ஆறு - உருண்ட சிறுகூழாங்கற்கள் - இயற்கையின் கண்காட்சி.**

விடை அமைதியான வனம் :

அடர்ந்த மரங்களைக் கொண்ட பசுமை மிகுந்த அமைதி நிறைந்த வனத்திற்குச் சென்றேன். வனத்தாவரங்கள் மற்றும் மலர்களின் நறுமணம் என் மனதைத் தொட்டது. அச்சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. இரவில் வீட்டில் இருக்கும் அமைதியைவிட வனத்தின் அமைதி என்னை மிகவும் கவர்ந்த து.

காட்டுயிரிகள் :

புதுமையான ஓர் அனுபவத்தைப் பெற்றேன். என் கால்கள் தரையில் ஊன்றியிருப்பதாய்த் தெரியவில்லை. இலைகளின் சலசலப்பு கேட்டு ஓசை வந்த திசை நோக்கித் திரும்பினேன். மரங்களின் மேலிருந்த பறவைகள் தங்கள் சிறகுகளை அடித்து சோம்பலைப் போக்கிக் கொண்டிருந்தன.

ஆரவார ஓசை :

திடீரென ஏற்பட்ட ஆரவார ஓசையைக் கேட்டு திரும்பிப் பார்த்தேன். குரங்குகள் தண்ணீரின் ஓட்டத்தில் தங்கள் முகங்களின் அழகைக் கண்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தன.

அழகான ஆறு :
தெளிவான நீரோடையின் உள்ளே, உருண்டை வடிவில் சிறு கூழாங்கற்கள் பார்ப்பதற்கு விலையுயர்ந்த கற்களைப் போலவும், கண்ணாடியால் செய்யப்பட்ட உருண்டைகள் போலவும் தோற்றமளித்தன. இத்தகைய இயற்கையின் கண்காட்சி என் மனதை விட்டு அகலவில்லை.

8. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா?

- மக்கள் பிறருக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகவே கருதியிருக்கின்றனர்.
- மனிதர்களுடைய துன்பங்கள் மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களின் துன்பங்களையும் நீக்க முற்பட்டிருக்கின்றனர்.
- தெய்வ நம்பிக்கை உடையவர்கள்.
- விரிச்சி கேட்டலில் நம்பிக்கை உடையவர்கள்.
- ஒருவரையொருவர் ஆற்றுப்படுத்தி மகிழ்ந்திருக்கின்றனர்.

9. இளங்கன்றின் வருத்தத்தைப் போக்க இடைமகள் கூறிய செய்தி யாது?

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் இப்போது ஓட்டி வந்துவிடுவர் – வருந்தாதே.

10. முல்லைப்பாட்டில் திருமால் குறித்து கூறப்பட்ட செய்தி யாது?

- வலம்புரிச்சங்கு பொறித்த கைகளை உடையவன் திருமால்
- குறுகிய வடிவம் எடுத்தவன்.
- மாவலி மன்னன் நீர்வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்தவன்.

11. மழைப்பொழிவு குறித்து முல்லைப் பாட்டில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?

- ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகி பெருந் தோற்றம் கொண்டது மேகம்.
- அம்மேகமானது வலமாய் எழுந்தது.
- மலையைச் சூழ்ந்தது.
- விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

12. மழை மேகம் – மழைப் பொழிவு குறித்து முல்லைப்பாட்டு எவ்வாறு வருணித்துள்ளது?

மழை மேகம் :

- வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடையவன் திருமால்.
- மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது விண்ணுக்கும் மண்ணுக்குமாய் பேருருவம் எடுத்தவன் திருமால்.
- அப்பேருருவத்தைப் போன்றுள்ளது மழை மேகம்.

மழைப் பொழிவு :

- பேருருவம் கொண்ட மேகமானது வலமாய் எழுந்தது.
- மலையைச் சூழ்ந்தது.
- விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

# காசிக்காண்டம்

1. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக :-**

- வாங்க ! வாங்க !
- பயணம் இனிமையாய் இருந்ததா?
- இன்னும் நன்றாகச் சாப்பிடுங்கள்.
- நீங்கள் வருகை புரிந்ததால் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி.
- நீங்கள் அடிக்கடி எங்கள் இல்லம் வர வேண்டும்.
- உங்களின் வருகை எங்களுக்குப் பெருமை.

2. **காசிக்காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களைக் கூறுக :-**

- இல்லற ஒழுக்கமானது விருந்தினராக ஒருவர் வந்தால்,
- அவரை வியந்து உரைத்தல்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
- முகமலர்ச்சியுடன் விருந்தினரை நோக்குதல்.
- வீட்டிற்குள் வருக என வரவேற்றல்.
- விருந்தினர் எதிரில் நின்று உபசரித்தல்.
- அவர் மனம் மகிழும்படி பேசுதல்.
- விருந்தினர் அருகிலேயே அமர்ந்திருத்தல்.
- அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல்.
- விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழி அனுப்புதல்.
- ஆகிய ஒன்பதும் காசிக்காண்டம் நூலில் இல்லொழுக்கம் கூறிய பகுதியில் உள்ள கருத்துகள் ஆகும்.

3. **காசிக்காண்டம் குறிப்பு வரைக**

- ❖ காசிநகரின் பெருமையைக் கூறும் நூல்.

- துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைக் கூறுகிறது.
- இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்.
- காசிக் காண்டம் நைடதம், லிங்கபுராணம், நறுந்தொகை, வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகிய நூல்களை இயற்றியவர்.
- முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசராகவும், தமிழ்ப் புலவராகவும் விளங்கியவர்.
- சீவலமாறன் என்ற வேறுபெயரும் இவருக்கு உண்டு.

4. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்கள் யாவை?
    - காசிக்காண்டம்
    - நைடதம்
    - லிங்க புராணம்
    - வாயுசம்கிதை
    - திருக்கருவை அந்தாதி
    - கூர்மபுராணம்
    - வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை.

5. “பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்” – தொடர் பொருள் விளக்கம் தருக.

    தொடர் இடம்பெறும் நூல் : காசிக்காண்டம்

    தொடர் விளக்கம் : விருந்தினர் அருகிலேயே விருந்து மேற்கொள்பவர் அமர்ந்து கொள்ளுதல்.

6. அதிவீரராம பாண்டியர் குறிப்பு வரைக.

பெயர் : அதிவீரராம பாண்டியன்

சிறப்பு : கொற்கையின் அரசர் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார்.

பட்டப் பெயர் : சீவலமாறன்

இயற்றிய நூல்கள் : காசிக்காண்டம், நைடதம், லிங்க புராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம், வெற்றிவேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை.'

## மலைபடுகடாம்

1. **இறடிப் பொம்மல் பெறுகுவிர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக:-**

நவிர மலை மக்களின் தலைவனான நன்னனின் இடத்திற்குச் செல்லும் கூத்தர்கள் அங்குள்ள வீடுகளில் தினைச்சோற்றை உணவாகப் பெறுவீர்கள் என்று எதிர்வரும் கூத்தர்களிடம் ஆற்றுப்படுத்துகின்றனர்.

2. **கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**

- ஆற்றுப்படுத்தும் கூத்தன் நவிரமலை மன்னனான நன்னனை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, 'பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்; இரவில் சேர்ந்து தங்குங்கள்; எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள். அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை

அடையுங்கள். அங்குள்ளவர்களிடம் பகைவரைப் பொறாமல் போர் செய்யவும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

- ❖ நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே நவிர மலை நாட்டு மக்களின் வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவர். அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச் சோற்றையும் உணவாகப் பெறுங்கள் என்று கூறி ஆற்றுப்படுத்தினான்.

3. மலைபடுகடாம் – பெயர்க்காரணம் கூறு.

மலைக்கு யானையை உருவகமாகக் கூறி, அதன் ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்துள்ளதால் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது.

4. ஆற்றுப்படை என்றால் என்ன?

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்தல்.

யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகிறோம்.

நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல்.

5. குறுநில மன்னன் நன்னனின் ஊரில் கூத்தர்களுக்கு வழங்கப்படும் உணவாக மலைபடுகடாம் கூறுவன யாவை?

- நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியல்.
- தினைச் சோறு.

6. பண்டையத் தமிழ் கலைஞர்கள் யாவர்?
    - கூத்தர்
    - பாணர்
    - விறலியர்.

7. மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது?

    மலைபடுகடாமில் ஒளிரும் பூங்கொத்துகளுக்குக் கூறப்பட்ட உவமை எரியும் நெருப்பு ஆகும்.

8. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
    மானா விறல்வெள் வயிரியம் எனினே " என்று யார் யாரிடம் கூறினார்?

    நன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரிடம் கூறினார்.

9. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
    மானா விறல்வெள் வயிரியம் எனினே" தொடர் பொருள் விளக்குக.

    தொடர் இடம் பெறும் நூல் : மலைபடுகடாம்
    தொடர் பொருள் விளக்கம் : பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

10. 'மலைபடுகடாம்' நூல் குறிப்பு வரைக.
    - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம்.
    - வேறு பெயர் : கூத்தராற்றுப்படை
    - அடிகள் : 583

- உருவகம் : மலைக்கு யானையை உவமையாக்கி அதன் ஓசையைக் கடாஅம் எனச் சிறப்பித்தது.
- பாட்டுடைத் தலைவன் : நன்னன் என்னும் குறுநில மன்னன்.
- பாடியவர் : இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

11. "நெய்க்கண் வேவையொடு குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்" இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம்:

இப்பாடல், பெருங்கௌசிகனார் பாடிய மலைபடுகடாம் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

பொருள்:

பரிசில் பெற்ற கூத்தன் பெறப் போகும் கூத்தனை ஆற்றுப்படுத்தல்.

விளக்கம் :

நன்னனின் ஊரில் பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெறப்போகும் கூத்தனிடம், "அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்" என்று ஆற்றுப்படுத்துகின்றான்.

12. **முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

- ✓ **முல்லை நில உணவுப் பொருள்கள்**
  - ✓ தினை
  - ✓ சாமை
  - ✓ நெய்
  - ✓ பால்
  - ✓ வரகு
  - ✓ முதிரை
- ✓ **மருத நில உணவுப் பொருள்கள்**
  - ✓ செந்நெல்லரிசி
  - ✓ வெண்ணெல் அரிசி

# பெருமாள் திருமொழி

1. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக :-

மருத்துவர், நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்து மருந்து கொடுத்தவுடன் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிக்கும் தன்மையால் அப்புண் ஆறிவிடும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது என்று பெருமாள் திருமொழி கூறுகிறது.

2. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக :-

உடலில் ஏற்பட்ட புண் :

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைத் துன்பம் தரும்படி கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அத்துன்பம் தனக்கு நன்மையே என்று உணர்ந்து நோயாளி மருத்துவர் மீது அன்பு காட்டுவார்.

நீங்காத துன்பம் :

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் (நோயாளியைப் போல) உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன்.

3. குலசேகர ஆழ்வார் திருவித்துவக்கோட்டு அம்மானிடம் வேண்டுவது யாது ?

மருத்துவர், நோயாளியின் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்து மருந்து கொடுத்தவுடன் அது நன்மைக்கே என்று உணர்ந்து

நோயாளி மருத்துவரை நேசிப்பார். வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அது போன்று நீ உன் விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உந்தன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்று குலசேகராழ்வார் கூறுகிறார்.

4. குலசேகர ஆழ்வார் - குறிப்பு வரைக :-

- குலசேகர ஆழ்வார் திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர்.
- இராமபிரானிடம் பக்தி மிகுதியாக வாய்க்கப் பெற்ற காரணத்தால் இவர் குலசேகரப் பெருமாள் எனவும் அழைக்கப்பட்டார்.
- இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்.
- இவர் அருளிய பெருமாள் திருமொழி, நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் ஒன்று. இதில் நூற்றைம்பது பாசுரங்கள் உள்ளன.
- இவர் வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர்.
- குலசேகரர் தமிழில் பெருமாள் திருமொழியையும், வடமொழியில் முகுந்த மாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

5. நாலாயிரத் திவ்விய பிரபந்தம் - குறிப்பு வரைக :-

- தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களுள் ஒன்று வைணவம்.
- வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றும் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்விய பிரபந்தம்.
- இது மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டது. இது திராவிட வேதம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இதைத் தொகுப்பித்தவர் நாரதமுனிகள் ஆவார்.

6. தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக:-

தமிழர் மருத்துவம்

- தமிழர் மருத்துவ முறை என்பது சித்த மருத்துவம் ஆகும்.
- தமிழர்கள் நோயைச் சரிபடுத்த இயற்கை தரும் இலை , காய் , கனிகளிலிருந்தே மருந்தைக் கண்டனர்.
- தமிழர் மருத்துவ முறையில் பக்க விளைவுகள் எதுவுமில்லை.
- குணமாவதற்கு சிறிது காலம் தாமதம் ஆனாலும் மீண்டும் அந்நோய் நம்மைத் தாக்காது.

நவீன மருத்துவம்

- நவீன மருத்துவ முறையினால் பக்க விளைவுகள் ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு.
- நோய்க்கிருமிகள் உடனடியாக அழிக்கப்படுகின்றன.
- இவ்வகை மருத்துவத்துறையில் கவனக்குறைவு ஏற்பட்டால் உயிர் இழப்பு நேரிடும்.

## பரிபாடல்

1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

- நிலம்
- நீர்
- காற்று
- வானம்
- நெருப்பு.

2. அண்டப் பெருவெளி குறித்து மாணிக்கவாசகர் மற்றும் எட்வின் ஹப்பிள் ஆகியோர் மூலம் அறியப்படும் செய்தி யாது? (or)

பால்வீதிகள் கண்டுபிடிப்பில், "எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர்" என்பதை நிரூபிக்க.

மாணிக்கவாசகர் கூற்று :

- அண்டப் பகுதியின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமான காட்சியும் ஒன்றுடன் ஒன்று ஈர்ப்புடன் நூறு கோடிக்கும் மேல் விரிந்து நின்றன.
- "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" என்னும் திருவாசகப் பாடலில் மேற்கண்ட செய்தியை 1300 ஆண்டுகளுக்கு முன் மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

எட்வின் ஹப்பிள் கூற்று :

- அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.
- வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறு தூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.
- மேற்கண்ட செய்தியை அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924 இல் நிரூபித்தார்.
- இதன் வழி பால்வீதிகள் கண்டுபிடிப்பில், "எட்வின் ஹப்பிளுக்கு முன்னோடி மாணிக்கவாசகர்" என்பதை அறியமுடிகின்றது.

3. "மீண்டும் பீடு உயர்பு ஈண்டி , அவற்றிற்கும் உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் :
இவ்வடிகள் பரிபாடலில் கீரந்தையார் பாடலில் இடம்பெறுகின்றது.

பொருள்:
உயிர்கள் தோன்றி நிலைபெறுதல்.

விளக்கம் :
மீண்டும் மீண்டும் நிறைவெள்ளத்தில் மூழ்குதல் நடந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது, அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான
ஊழிக்காலம் வந்தது.

4. பரிபாடல் நூல் குறிப்பு வரைக.

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல் – அகம் புறம் சார்ந்த நூல்.
- இந்நூல் "ஓங்கு பரிபாடல்" என்னும் புகழுடையது.
- சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்.
- உரையாசிரியர்கள் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர்.
- 24 பாடல்களே கிடைத்துள்ளன.

5. சங்க இலக்கியமான பரிபாடலில்....... பூமியின் தோற்றம் குறித்து சொல்லப்பட்டவற்றை விளக்குக.

- எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.
- உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதங்கள் உருவாகின.
- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்தது.
- பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.

- மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் இப்பெரிய புவி மூழ்கி உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- இச்சூழல் மாற்றத்தினால் உயிர்கள் தோன்றி நிலை பெற்று வாழ்கின்றன.
- புவி உருவாகிய நிகழ்வை அறிவியல் அறிஞர்கள் கண்டறியும் முன்பே நம் தமிழர் கண்டறிந்தனர் என்பது தமிழருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியும் பெருமைக்குரிய செயலுமாகும்.

## நீதிவெண்பா

1. ஏன் கல்வியைப் போற்றிக் காக்க வேண்டும் எனச் செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்?

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதைப் போற்றிக் கற்க வேண்டும் எனச் செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்.

2. சதாவதானம் குறிப்பு வரைக.

'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் ஆகும்.

3. செய்குதம்பிப் பாவலர் ஏன் சதாவதானி என்று போற்றப்படுகிறார்?

செய்குதம்பியார் 1907 ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாள் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து

காட்டி ‘சதாவதானி’ என்று பாராட்டப் பெற்றார். அன்று முதல் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர்’ என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

4. செய்குதம்பிப் பாவலர் குறிப்பு வரைக.

பெயர் : செய்குதம்பிப் பாவலர்

காலம் : 1874 – 1950

ஊர் : கன்னியாகுமரி – இடலாக்குடி

சிறப்பு : 15 வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல், 1907இல் சதாவதானி பட்டம் பெற்றார்.

## திருவிளையாடற்புராணம்

1. “கழிந்த பெரும்கேள்வியினான் எனக் கேட்டு முழுது
உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான்
இடைக்காட்டுப் புலவன் தென்சொல்”
– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?

கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர்) – குலேசபாண்டியன்.

காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர்) – இடைக்காடனார்.

2. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

- குலேச பாண்டியன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன்.
- அவன் அவையில் புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை மன்னன் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.

- இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன் கடம்பவனம் கோயிலை விட்டு நீங்கி வைகை ஆற்றின் தெற்கே கோயில் உருவாக்கி அமர்ந்தார்.
- இதையறிந்த மன்னன் யான் என்ன தவறு செய்தேன்? ஏன் இங்கு அமர்ந்தீர்? என்று வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றமே தவிர, வேறு எந்த தவறும் இல்லை என்றார்.
- தன் தவறை உணர்ந்த மன்னன் இடைக்காடனாரை அழைத்து மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்தி, பணிந்து வணங்கி தம் தவறைப் பொறுத்தருள வேண்டினான்.

3. "பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்" என்று பாண்டியன் இறைவனிடம் வினவியதை எழுதுக.

- இறைவனே, என்னால், என்படைகளால், என்பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ்நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா?
- வேதங்களை பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா?
- தவமும் தருமமும் சுருங்கியதோ?
- இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ?

  – எமது தந்தையே யான் அறியேன் என்று குலேச பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

4. "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமையன்றோ எண்ணிய பெரியோர்க்கு" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம் சுட்டல்:

பெரிய புராணம் திரு ஆலவாய்க் காண்டத்தில், இடைக்காடன்

பிணக்குத் தீர்த்த படலத்தில் குலேச பாண்டியன் இறைவனிடம் வினவினான்.

பொருள் விளக்கம்:
வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டுப் பாண்டியன், "பார்வதி தேவியை ஒரு பாகத்தில் கொண்டபரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டினார்.

5. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் – சொல்லேருழவன் யார்? வில்லேருழவன் யார்?

1. சொல்லேருழவன் (புலவன்) – மோசிகீரனார்
2. வில்லேருழவன் (மன்னன்) – தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

6. பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப்பரவித் தாழ்ந்தவன்" பண்ணிய குற்றம் யாது?

குலேச பாண்டியன் இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தார். அதனால் இறைவன் கோயிலை விட்டு நீங்கினார்.

7. சொல் வடிவாய் நின்றவர் யார்? சொல் பொருளாய் விளங்கியவர் யார்?

- சொல் வடிவாய் நின்றவர்: பார்வதி தேவி
- சொல் பொருளாய் விளங்கியவர்: இறைவன் (ஈசன்)

8. "யாம் அவனிடத்தில் வைத்த அருளினால் வந்தேம்" என்று இறைவன் கூறக் காரணம் யாது?

இடைக்காடனாரின் செய்யுளை குலேச பாண்டியன் இகழ்ந்தான். இறைவன் இடைக்காடனாரின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்ததனால் இறைவன் கோவிலை விட்டு நீங்கினான்.

9. "பிழைத்தனவோ யான் அறியேன் எந்தாய்" யார் யாரிடம் கூறியது?
குலேச பாண்டியன் இறைவனிடம் (ஈசன்) கூறினார்.

10. 'சொல் பொருளான உன்னையுமே இகழ்ந்தனன்' – பொருளானவன் யார்? இகழ்ந்தவன் யார்?
1.பொருளானவன் – திருஆலவாய் இறைவன் ஈசன்
2. இகழ்ந்தவன் – குலேச பாண்டியன்

11. 'நின்இடம் பிரியா இமையப் பாவை' – இவ்வடிகளில் சுட்டப்படுபவர் யார்?
ஈசனின் இடத்தில் வீற்றிருக்கும் பார்வதி தேவியே இவ்வடிகளில் சுட்டப்படுகின்றார்.

12. நும் கவிதைப் பேழைப் பகுதி அமைந்த திருவிளையாடற்புராணப் பாடல் அமைந்த காண்டம் மற்றும் படலம் எது?
காண்டம்: திரு ஆலவாய்க் காண்டம்
படலம் : இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

13. இறைவன் கோவிலை விட்டு எதற்காக நீங்கினார்? எவ்வாறு நீங்கினார் ?

இடைக்காடனார், மன்னன் தன்னை அவமதித்ததைக் கோவிலில் இறைவனிடம், சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படை போல் இறைவனின் செவியில் தைத்தது. கோவிலை விட்டு

வெளியேறிய இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சியை உண்டாக்க நினைத்தார். அதற்காக கோவிலை விட்டு நீங்கினார். இறைவன் ஞானமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியோடு திருக்கோவிலை விட்டு வெளியேறி நேர் வடக்கே வையை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோவிலை உருவாக்கி அங்கு சென்றார்.

14. சொல்லேருழவனுக்கும் கவரி வீசிய வில்லேருழவன் நிகழ்வை நயத்துடன் எழுதுக:-

ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார். அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்கு தண்டனை வழங்காமல் கவரி வீசினார். உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை. கண் விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழைப் பொழிந்தார்.

15. இடைக்காடனார் இறைவனிடம் எவ்வாறு முறையிட்டார் என்பதை விளக்குக:-

இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி, 'தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நீதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் என்று கூறக் கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் என் புலமையை அவமத்தித்தான்' என்றார். மேலும் இடைக்காடனார் இறைவனிடம், 'பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்' என்று கூறி முறையிட்டார்.

1. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுத்துகிறது. இக்கருத்தினை ஒப்பிட்டு எழுதுக:-

| நவீன கவிதை | நாட்டுப்புறப் பாடல் |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான் | கையாலே பூவெடுத்தா - மாரிக்கு<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா - மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டிக் கொண்டு -<br>மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார். |

- நவீன கவிதையில் பூக்களை இறுக்கமாக முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறிந்து விடும். தளர்வாகப் பூக்களைச் சேர்த்தால் தரையில் வீழ்ந்து விடும். இங்கு பூவின் மென்மையும், அழகும், நளினமும் அருமையாக எடுத்துரைக்கப்படுகிறது.

- நாட்டுப்புறப்பாடலில் பூவைக் கையால் எடுத்து மாரியம்மனுக்குச் சூட்டினால் காம்பு அழுகிப் போகுமாம். விரலால் பூவை எடுத்தால் வெதும்பி விடுமாம். அதனால் தங்கத் துரட்டியால் மலரை எடுத்து மாரியம்மனுக்கு மலர் சூட்டுவார்கள் என்று கூறப்படுகிறது.

இரு பாடல்களிலும் பூக்களின் மென்மை, அவற்றைக் கையாள வேண்டிய கூர்மைத்தன்மை போன்றவற்றை நாம் காண்கிறோம்.

2. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கிற ஒல்லித் தண்டுகளாகக் குறிப்பிடப்படுவோர் பெண்கள். இவர்கள் அமைதியான முறையில் இவ்வுலகத்தைத் தாங்கி நிறுத்தப் போராடும் போராளிகள்.

3. 'பூத்தொடுத்தல்' என்னும் கவிதை நூலின் ஆசிரியரைப் பற்றி நீ அறிந்தவற்றைக் கூறுக.

ஆசிரியர் பெயர் : கவிஞர் உமா மகேஸ்வரி

பிறப்பு : மதுரை

வாழ்ந்து வரும் ஊர் : தேனி, ஆண்டிப்பட்டி.

நூல்கள் : நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை.

4. பூக்களைத் தொடுக்கும் போது இறுக்கி முடிச்சிடுவதாலும் தளரப் பிணைப்பதாலும் நிகழ்வது என்ன?

- இறுக்கி முடிச்சிடுவதால் காம்புகளின் கழுத்து முறியும்.
- தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.

5. பூத்தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் யாரைக் குறிக்கிறது? அப்பூவைத் தொடுப்பது எப்படி?

- பூவை என்ற சொல் பெண்ணைக் குறிக்கிறது.
- மனமாகிய நுட்பமான நூலால் மட்டுமே தொடுக்க முடியும்.

6. பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக ஆசிரியர் கூறுவன யாவை?

- இந்தப் பூவாகிய பெண்மையை நான் எப்படித் தொடுப்பேன். இந்தப் பூவின் மெல்லிய தண்டுகள் அமைதியான உலகத்தைச் சுமக்கின்றன.
- இந்தப்பூவின் மெல்லிய தண்டை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு முறியும். தளர்ந்து பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.
- இவ்வாறு வாசலில் மரணம் நிற்பதை அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இப்பூவையை நான் எப்படித் தொடுப்பேன்.
- ஒரு வேளை என் மனம் மிகநுட்பமாக மாறி நூலானால் மட்டுமே இது சாத்தியம் என்கிறார் கவிஞர் உமாமகேஸ்வரி.

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

1. கோசல நாட்டின் வளத்தை விளக்குக:-

- கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால் கொடைக்கு அங்கே இடமில்லை.
- நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வலிமையலில்லை.
- பொய் மொழி இல்லாமையால் , உண்மை தனித்து விளங்குவதில்லை.
- பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

2. மருதநிலக் காட்சியை விளக்குக:-

குளிர்ந்த சோலைகளில் மயில் அழகுற ஆட, விரிந்த தாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற , சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ , மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல் காண , நீர்நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய

, மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருத நிலக் காட்சி தெரிந்தது.

3. சரயு ஆறு எங்கெங்கு பாய்ந்து செல்கிறது ?

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள் , மரங்கள் செறிந்த செண்பகக் காடுகள் , அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள் , புதுமணல் தடாகங்கள் , குருக்கத்தி , கொடி வேலியுடைய கமுகத் தோட்டங்கள் , நெல் வயல்கள் அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயு ஆறு.

4. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

- திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும்.
- இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவட்டங்கள் ஆடட்டும்.
- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடட்டும்.
- பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்ட வடிவமான சுட்டி பதிந்தாடட்டும்.
- உச்சிக் கொண்டையும் ஒளியுள்ள முத்துக்களோடு ஆடட்டும்.
- தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே செங்கீரை ஆடி அருள்க!

5. பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக.

வகை :
96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

வரையறை :

இறைவனையோதலைவரையோ அரசனையோ

பாட்டுடைத்தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக்

கருதி பாடப்படும். பாட்டுடைத் தலைவனின் செயற்கரிய செயலை எடுத்தியம்பும்.

வகைகள் : இரண்டு வகைப்படும். அவை: ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்.

பருவங்களின் எண்ணிக்கை :
பத்து. பருவத்துக்குரிய 10 பாடல்கள் வீதம் 100 பாடல்கள் உள்ளன.

ஆண்பால் பிள்ளைத்தமிழின் பருவங்கள் :
காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்.

பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் :
காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல்.

பொதுவான பருவங்கள் :
காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி.

6. பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவராகக் கருதப்படுவோர் யார்?
இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குழந்தையாகக் கருதிப் பாடப்படும்.

7. செங்கீரைப் பருவம் குறிப்பு வரைக.
- செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போல குழந்தையின் தலை 5-6ஆம் மாதங்களில் மென்மையாக அசையும்.
- இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒரு காலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகம் அசைந்தும் ஆடும்.

8. குமரகுருபரர் குறிப்பு வரைக.

ஆசிரியர் பெயர் – குமரகுருபரர்
காலம் – கி.பி. 17ஆம் நூற்றாண்டு
புலமை பெற்ற மொழிகள் – தமிழ், வடமொழி, இந்துஸ்தானி.
இயற்றிய நூல்கள் – கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை.

9. பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் குறிப்பிடும் அணிகலன்கள் யாவை? அவை எவ்விடங்களில் | அணியப்படும் என்பதையும் பட்டியலிடுக.

| அணிகலன்கள் | அணியப்படும் இடம் |
| --- | --- |
| சிலம்பு, கிண்கிணி | கால் |
| சுட்டி | நெற்றி |
| அரைநாண் | இடை (இடுப்பு) |
| குண்டலம், குழை | காது |
| சூழி | தலை |

## <u>கம்பராமாயணம்</u>

1. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

- 'கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டது. அதனைக் காண்பதற்கு எழுந்திடுவாய்' என்று சொல்லி எழுப்பினார்கள்.
- வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையிலே படுத்து உறங்கச் சொல்கிறார்கள்.

2. சரயு ஆறு பாய்ந்து வருவதைக் கம்பர் எவ்வாறு காட்சிப்படுத்துகின்றார்?

- மகரந்தம் சிந்தும் சோலைகள்,
- மரங்கள் மிகுந்த செண்பகக் காடுகள்,
- அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்,
- புதுமணல் குளங்கள்,
- குருக்கத்தி வேலியுள்ள பாக்குத் தோட்டங்கள்
- நெல் வயல்கள் – இவை அனைத்தும் பரவிப் பாய்கிறது. சரயு ஆறு, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கின்றது.

3. இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் கவி எவ்வாறு காட்டுகிறது. (அல்லது) மருதம் எவ்வாறு வீற்றிருக்கிறது?

- குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆடின.
- விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்றின.
- சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழுந்தன.
- மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல் காட்சியளித்தன.
- நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிந்தன.
- மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருந்தது.

4. கம்பர் குறிப்பு வரைக.

ஆசிரியர் பெயர் : கம்பர்
பிறந்த ஊர் : சோழ நாட்டில் உள்ள திருவழுந்தூர்
ஆதரித்தவர் : திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்
பெற்ற சிறப்புகள் : கல்வியில் பெரியவர் கம்பர், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்'
இயற்றிய நூல்கள் : கம்பராமாயணம், சரசுவதி அந்தாதி,

சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏர் எழுபது, சிலை எழுபது.

5. கங்கை காண் படலத்தில் வேடனின் கூற்றை எழுதுக.
- யானைகள் கொண்ட சேனையைக் கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில் வீரனல்ல நான்.
- இராமனுடைய தோழமையை எண்ணாமல் ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை அவர்கள் தனியே கடந்து போக விடலாமா?
- அவ்வாறு செய்தால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என்று உலகத்தார் என்னைப் பழிசொல்ல மாட்டார்களா? என்று கூறினான்.

6. இராமனின் வடிவை எவற்றிற்கெல்லாம் உவமையாக்கியுள்ளார் கம்பர்?
- மை
- நீலக்கடல்
- பச்சை நிற மரகதம்
- கார்மேகம்

7. கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை? ஏன்?
- வறுமை இல்லாததால் அங்கே கொடை இல்லை.
- நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.
- பொய்மொழி இல்லாததால் மெய்மை தனித்து விளங்கவில்லை.
- கேள்விச் செல்வம் மிகுந்திருப்பதால் அறியாமை இல்லை.

8. சரயு ஆறு எவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்?
- மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்
- புதுமணல் தடாகங்கள்
- அரும்புகள் மலரும் பொய்கைகள்
- நெல்வயல்கள்

9. கம்பராமாயணம் குறிப்பு வரைக.

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.
- கம்பர் தம் எழுதிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
- ஆறு காண்டங்களை உடையது.
- சந்தநயம் மிக்கது.

10, கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?

- சரசுவதி அந்தாதி
- ஏரெழுபது
- சடகோபர் அந்தாதி
- சிலை எழுபது
- திருக்கை வழக்கம்

11. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் யாவை?

- கல்வியில் பெரியவர் கம்பர்.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்.

******************************************************************